# சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

## செய்திமடல் - 1 | 26-05-2011

19-05-2011

**தலைப்பு : கற்கை வட்டத்தை மேலும் வினைத்திறனுடையதாக்குவது பற்றிய கலந்துரையாடல்**

இதுவரைகாலத்து சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செயற்பாடுகள் பற்றிய ஒரு மீள் பார்வையாகவும், எதிர்காலத்தில் கற்கை வட்டத்தை மேலும் வினைத்திறனாக்குவதற்குச் செய்யவேண்டியிருக்கும் பணிகள் பற்றிய கலந்துரையாடலாகவும் இவ்வாரம் கூட்டம் நடைபெற்றது.

கற்கை வட்டத்தின் குறை நிறைகள் பற்றிய ஒவ்வொருவரதும் கருத்துக்கள் கேட்டறியப்பட்டதுடன் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய பின்வரும் விடயங்களும் திட்டமிடப்பட்டது.

1. ஒருமாதகாலத்துக்கான கூட்டத்தலைப்புக்களும் உரையாற்றுவோரும் முன்கூட்டியே திட்டமிடப்பட வேண்டும். ஒவ்வொரு வாரமும் கூட்டத்தின் முடிவில் நான்காவது வாரத்துக்கான தலைப்பு முடிவு செய்யப்படும்.

2. சிறப்பான சூழ்நிலைகளில் தலைப்புக்கள் மாற்றப்படலாம்.

3. சமூக விஞ்ஞான அறிவைப் பகிர்ந்துகொள்ளக்கூடிய வளவாளர்களை இனம்கண்டு பட்டியலிடவேண்டும். அவர்களுடன் தொடர்புகொண்டு அவர்களது அறிவை/அனுபவங்களை கூட்டத்தில் பகிர்ந்துகொள்ள அழைக்கவேண்டும்.

4. கலந்துரையாடல் நேரத்தில் தலைப்பினைத்தாண்டி உரையாடல் வெகுதூரம் போய்விடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இதற்கென ஒவ்வொரு கூட்டத்திலும் மட்டுறுத்துனர்கள் செயற்படவேண்டும்.

5. கூட்டத்தில் உரையாற்றவுள்ளவர் முன்கூட்டியே அன்றைய உரையின் விடயச்சுருக்கத்தைத் தந்துவிடவேண்டும்.

6. கூட்டமொன்றில் கலந்துரையாடல் நிறைவு பெறாமல் தொடர்ந்தவண்ணமிருந்தால், எஞ்சிய உரையாடலை அடுத்த கூட்டத்தின் தேநீர் வேளையில் தொடரலாம்.

7. உரையாற்றுபவருக்கு, கூட்டத்தின் தொடக்கத்தில் 30-40 நிமிடங்கள் ஒதுக்கப்படும். உரையாற்றிக்கொண்டிருக்கும் போது கேள்விகள் எழுந்தால் மட்டுறுத்துனரின் அனுமதியுடன் சுருக்கமாகக் கேட்கலாம். 40 நிமிடங்களுக்குள் உரையாற்றும் விடயம் முடிவடையாவிட்டால் உரையை நிறுத்தி, கலந்துரையாடலுக்கு இடம் கொடுத்து பின் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் அனுமதியுடன் உரையத் தொடரலாம்.

8. கற்கை வட்டத்தின் செலவில் 30 பென்சில்கள், வெற்றுத்தாள்கள் கூட்டத்தின் தொடக்கத்தில் வழங்கப்படும். கேட்கவேண்டிய கேள்விகளைக் குறித்து வைக்கவும், கூட்டத்தைக் குறிப்பெடுக்கவும் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம். கூட்ட முடிவில் பென்சில்கள் மீள ஒப்படைக்கப்படும்.

9. கூட்டங்களுக்கான அறிவித்தல்கள் போதிய கால அவகாசத்துடன் அறிவிக்கப்படவேண்டும். அறிவித்தல் விளக்கமாக, தலைப்புத்தொடர்பான சிறு குறிப்புடன் அமைய வேண்டும்.

10. கற்கை வட்டத்தின் செய்தியேட்டுக்காக கூட்டங்கள் குறிப்பெடுக்கப்படவேண்டும். இவ்வேலையைச் சுழற்சி முறையில் பகிர்ந்துகொள்ளலாம்.

11. கூட்டத்துக்கு நண்பர்களை அழைப்பதற்காக ஒரு தரவுத்தளம் உருவாக்கப்படவேண்டும். Facebook மூலம், மின்னஞ்சல் மூலம், குறுந்தகவல் மூலம், தொலைபேசி அழைப்பின் மூலம் அழைக்கப்பட வேண்டியவர்களைத் தனித்தனியாகப் பட்டியலிட வேண்டும்.

12. ஒவ்வொரு மாதமும் நான்காவது வாரம் கோட்பாட்டு ரீதியான தலைப்பு எடுக்கப்பட்டு உரையாடப்படவேண்டும்.

13. கூட்டங்கள் தொடர்பான அறிவித்தல்களைப் பத்திரிகைகளில் செய்யும் பணியை ஒருவர் பொறுப்பெடுக்க வேண்டும்.

14. ஒவ்வொரு நாளும் முடிந்தவரை 7.30 க்கு கூட்டத்தை முடிக்க வேண்டும். அதற்கேற்றபடி 6 மணிக்கு முன்னரே கூட்டம் ஆரம்பிக்கப்படவேண்டும்.

### எதிர்வரும் வாரங்களுக்கான தலைப்புக்கள்

26 - 05 - 2011

**புதுப்புது மதக்குழுக்கள் - ஆன்மீகபீடங்கள் - சமூகம்**

- மு. மயூரன்

---

02 - 06 - 2011

**உடலுழைப்பும் மூளை உழைப்பும்**

- சி. சிவசேகரம்

---

09 - 06 - 2011

**இலங்கையின் இன்றைய முறைசார் கல்வி**


- ரஞ்சன்

---

16 - 06 -2011

**பாலியல் தொழிற்துறையும் பெண்கள் மீதான சுரண்டலும்**

- தேவசபா தனுஜன்



கார்ல் மார்க்ஸ்( Karl Heinrich Marx, மே 5, 1818, ஜேர்மனி - மார்ச் 14, 1883, இலண்டன்) ஜெர்மனிய மெய்யியலாளர்களுள் ஒருவராவார்.

மெய்யியலாளராக மட்டுமல்லாது அரசியல் பொருளாதார வரலாற்றியல் நிபுணராகவும், தலைசிறந்த ஆய்வறிஞராக, எழுத்தாளராக, சிந்தனையாளராக, புரட்சியாளராகவும் கார்ல் மார்க்ஸ் அறியப்படுகிறார்.

ஆய்வாளரும் அறிவியலாளரும் "மெய்யைத்" தேடுகிறார்கள். மெய்களைக் கண்டறிந்து சொல்கிறார்கள். காலந்தோறும் கண்டுபிடிக்கப்படும் புதிய புதிய மெய்களிற் சில உலகைப் புரட்டிப்போடுகின்றன. அப்படிப்பட்ட மெய்கள் பலவற்றைக் கண்டறிந்து சொன்ன ஆய்வாளன், அறிவியலாளன், மெய்யியலாளன் கார்ல் மார்க்சுக்கு இன்று பிறந்தநாள்.

**- சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் இணையக் குழுமத்தில் பிரசுரிக்கப்பட்ட கார்ள் மார்க்ஸ் பிறந்த நாள் (மே 05) குறிப்பு.**

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
**தேசிய கலை இலக்கியப் பேரவை,**
**571/15. காலி வீதி,**
**வெள்ளவத்தை**

# புதுப்புது மதக்குழுக்கள் - ஆன்மீக பீடங்கள் - சமூகம்

*26-05-2011* அன்று நடைபெறவுள்ள கூட்டத்துக்கான விடயப்பரப்புக்கள்
**-மு. மயூரன்**

சத்தியசாயி, ஜெகோவாவின் சாட்சிகள் போன்ற, புதிதுபுதிதாய் உருவாகும் மதக்குழுக்கள் பற்றியும் அவை சமூகத்தில் செலுத்தும் தாக்கங்கள், அவற்றின் அரசியல் பின்னணிகள் பற்றியும் இத்தலைப்பில் உரையாடப்படும். மதக்குழுக்களின் பரவலுக்கு மக்களை மட்டுமே குற்றம் சாட்டுவதன் பின்னால் பாதுகாக்கப்படும் அரசியல் நிகழ்ச்சிநிரல்கள் பற்றியும் பேசப்படும்.

பின்வரும் விடயப்பரப்புக்களில் உரையாடல் அமையும்

* தேர்ந்தெடுக்கப்பட்ட சில மதக்குழுக்கள் பற்றிய அறிமுகம். அவற்றின் வரலாறு
* மதக்குழுக்களிடையே காணப்படும் பொதுத்தன்மைகள்.
* ஏற்கனவே உள்ள பெரிய மதங்களுக்கும் மதக்குழுக்களுக்கும் இடையேயான தொடர்பு
* மதக்குழுக்கள் உருவாவதற்குத் துணைசெய்யும் சமூக நிலைமைகள்.
* சமூகத்தில் மதக்குழுக்கள் பரவும் விதமும் அதன் தாக்கங்களும்
* மதக்குழுக்களும் அரசியலும்
* மதக்குழுக்களை எதிர்கொள்ளும் வழிமுறைகளும் இவற்றை நிரந்தரமாகத் தோற்கடிப்பதற்கு செய்யவேண்டிய பணிகளும்

## வலை

**இந்தியா ஒரு கார்பரேட், இந்து அரசு ! அருந்ததிராய், கரண் தபார் நேருக்குநேர் !**

சி.என்.என்-ஐ.பி.என், டெவில்ஸ் அட்வகேட் நிகழ்ச்சியில் செப். 12, 2010 அன்று அருந்ததி ராயுடன் கரண் தபார் நடத்திய விவாதத்தின் தமிழாக்கம்

**முழுமையாகப் படிக்க**: valai.thulaa.net/4

*[மூலம் : http://www.vinavu.com/2010/10/06/devils-advocate-arundathi-roy/ ]*

**சர்வதேசச் சமூகமும் வரலாறும் விடுதலையும்: சில குறிப்புகள் -அஸ்வத்தாமா**

இன்று லிபியாவில் நேற்று ஈராக்கில், ஆப்கானிஸ்தானில் என எல்லாவற்றிலிலும் “சர்வதேசச் சமூகம்” எவ்வாறு நடந்துகொள்கிறது என்பதைப் பற்றி வியப்பதற்கு எதுவுமில்லை. அது எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படித்தான் நடந்து கொள்கிறது. இதற்கிடையில் லிபியாவில் பொதுமக்களைக் காப்பாற்ற தலையிட்ட ஐ.நாவும் சர்வதேசச் சமூகமும் இலங்கைத் தமிழர் விடயத்தில் அவ்வாறு நடந்துகொள்ளாமல் தமிழர்களை ஏமாற்றிவிட்டதாகப் பத்திரிகைகள் எழுதுகின்றன.

**முழுமையாகப் படிக்க**: valai.thulaa.net/5

*[மூலம் : http://www.ndpfront.com/?p=20356 ]*

**அமெரிக்காவில் தோன்றிய அடிமைகளின் சுதந்திர தேசம்**

வெள்ளையின கனவான்களின் பெருந்தன்மையே அடிமைத் தளையை தகர்த்தாக வரலாறு மாற்றி எழுதப்பட்டது. பிரேசிலில், அடிமைத்தளைகளை அறுத்தெறிந்த கறுப்பின அடிமைகள், ஒரு சுதந்திர தேசத்தை நிர்மாணித்திருந்தனர்.

**முழுமையாகப் படிக்க**: valai.thulaa.net/6

*[மூலம் : http://kalaiy.blogspot.com/2011/05/blog-post_20.html]*

Assange: Facebook is an 'appalling spy machine'

*WikiLeaks founder Julian Assange says Facebook, Google, and Yahoo are actually tools for the U.S. intelligence community.*

**முழுமையாகப் படிக்க**: valai.thulaa.net/7

*[மூலம் : http://news.cnet.com/8301-13506_3-20059247-17.html ]*

**அ.தி.மு.கவின் அசுர வெற்றியும், தி.மு.கவின் நாக் அவுட் தோல்வியும்!**

தமிழகத்தில் பிசாசு ஆட்சி அகன்று பேயாட்சி வந்திருக்கிறது… எதிர்மறையில் கிடைத்த இந்த வெற்றியில் அ.தி.மு.க வின் சொந்த பங்கு எதுவும் இல்லை !

**முழுமையாகப் படிக்க**: valai.thulaa.net/8

*[மூலம் : http://www.vinavu.com/2011/05/13/aiadmk-2011-victory/ ]*

## நிகழ்வுகள்

**அஷ்ரஃப் சிஹாப்தீனின் 'ஒரு குடம் கண்ணீர்'**
நூல்வெளியீடு

*28-05-2011* (சனிக்கிழமை)மாலை 4.30
கொழும்பு தமிழ் சங்கம், சங்கரப்பிள்ளை மண்டபம்

---

**முத்தமிழ் விழா**-*2011*
கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் நடாத்தும் நாடளாவிய தமிழ் கலாசார விழா.

சனிக்கிழமை, ஜூன் *4 · 4:00pm - 8:30pm*
இராமகிருஷ்ணமிசன் மண்டபம்-

---

**இஸ்ரேலின் உருவாக்கம்**
நூல் வெளியீடு

ஞா. சிறீமனோகரன்
ஜூன் - 5 , மாலை 4 மணி
தேசிய கலை இலக்கிய பேரவை - கைலாசபதி

## வெளிவந்துவிட்டது..




"தாயகம்"
(காலாண்டிதழ்)

ஜனவரி - மார்ச் *2011*

இதழ் - *80*

விலை : *50/=*

தேசிய கலை இலக்கிய பேரவை